JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume: 17 | Issue: 01 | March 2026 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10



வாலிபனே, உன் வாழ்வில் தேவனுடைய வரங்களும், வல்லமைகளும் செயல்பட வேண்டுமானால்,

# அசதியாயிராதே

## உள்ளே...











# வாலிபர் உலகம்

## வாசகர்களின் கவனத்திற்கு...



₹100 ஆண்டு சந்தா

₹1000 ஆயுள் சந்தா

கீழே கொடுக்கப்பட்டுள்ள QR ஸ்கேன் பண்ணினால்...

ஒவ்வொரு மாதமும் பத்திரிக்கைபற்றிய கருத்துக்களை தெரியப்படுத்தலாம்.

நீங்கள் பெற்றுக் கொண்ட நன்மைகள், உங்களுக்குப் பிடித்தமான கட்டுரைகள் அதன் மூலம் கற்றுக் கொண்டவைகளை தெரியப்படுத்தலாம்.

உங்கள் சந்தாவை புதுப்பிக்கலாம்.

**பத்திரிக்கையைக் குறித்த உங்களுடைய கருத்துக்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.**

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்

**எனக்கன்பான வாலிபர்களே!**
**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.**

இன்றைய வாலிபர்கள், பராக்கிரமசாலிகளாக தேவனுக்காக எழும்பிப் பெரிய காரியங்களைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் மற்றொரு பக்கம் அவர்கள் அசதியாய் இருப்பதினால், தாங்கள் பெற்றுக்கொண்ட இரட்சிப்பை இழந்து, பரிசுத்தத்தை மறந்து, அபிஷேகத்தையும் அழைப்பையும் இழந்து, தாங்கள் பெற்ற வரங்களையும் வல்லமைகளையும் மறந்து, மூலையில் முடங்கி இருக்கிறார்கள்.. அதனால் தான் பவுல் தீமோத்தேயு என்னும் வாலிபனுக்கு எழுதுகிறார்; உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப் பற்றி **அசதியாயிராதே; மாறாக, நீ மாதிரியாயிரு ஜாக்கிரதையாயிரு எச்சரிக்கையாயிரு!!!** என்று புத்தி சொல்லுகிறார்.

உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு,
உன் வார்த்தையிலும் நடக்கையிலும் அன்பிலும் ஆவியிலும் விசுவாசத்திலும்
கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு!

புத்தி சொல்லுவதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு!

உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு!!

இப்படி செய்வாயானால் உன்னையும் உன் உபதேசத்தை கேட்கிறவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய் என்று பவுல் தன் உத்தம குமாரனாகிய தீமோத்தேயு என்னும் வாலிபனுக்கு எழுதுகிறார்.

நீயும், இப்படி செய்யும்போது உன்மூலம் தேவன் ஒரு பெரிய எழுப்புதலுக்கான ஆத்துமாவை அறுவடைய செய்ய முடியும்.

கிறிஸ்துவின் பணியில்
**மோகன் சி. லாசரஸ்**



சாட்சி: தொகுப்பு வில்லியம்



# வியாதியின் மத்தியில் வெற்றியின் கிரீடம்!!!

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஒரு சிறு கிராமத்தில் பார்வை குறைபாடுடன் பிறந்து, 10ஆம் வகுப்பு படிக்கும்போது வந்த வியாதியின் நிமித்தம் மிகுந்த பெலவீனத்தோடு தேர்வை எழுதி, 10,11,12 வகுப்புகளில் School First எடுத்து வெற்றிபெற்று இன்றைக்கு கல்லூரி படித்து வரும் மைக்கேல் வின்சியாவைப் பற்றித் தான் பார்க்கப் போகிறோம்.

**உங்களைப் பற்றியும் உங்களது சிறுவயது பற்றியும் சொல்லுங்களேன்?**

நான் தூத்துக்குடி மாவட்டம் வேம்பாடு கிராமத்தில் வசித்து வருகிறேன். தற்பொழுது நான் கல்லூரி முதலாம் ஆண்டு படிக்கிறேன். எனக்குப் பிறவியிலேயே பார்வைத் திறன் குறைபாடு உள்ளது. நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும், பல வருடங்கள் கிறிஸ்து இல்லாத ஒரு வாழ்க்கையை வாழ்ந்து வந்தேன். இந்தச் சூழ்நிலையில் தான் நான் மேற்கல்விக்காக (9-12ஆம் வகுப்புவரை) பார்வைத் திறன் குறைவுடைய குழந்தைகள் மட்டும் படிக்கும் ஒரு சிறப்புப் பள்ளியில் சேர்ந்தேன்.

**அப்படீன்னா... கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த நீங்கள் சிறுவயதிலேயே கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டீர்களா?**

நான் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும், சிறப்புப் பள்ளியில் சேர்ந்த பிறகு தான் இயேசுவைப் பற்றியும், அவர் செய்த அற்புதங்களைப் பற்றியும் மெதுவாக அறிந்து கொள்ள ஆரம்பித்தேன்.



ஆரம்பத்தில் இது எனக்கு வித்தியாசமாகத் தோன்றியது. ஏனெனில் எனக்குத் தெரிந்தது எல்லாம் இயேசு என்பவர் நானும் என் குடும்பமும் வணங்கும் ஒரு கடவுள். பைபிள் என்பது எங்களின் புனித நூல் மட்டுமே என்று நான் புரிந்து வைத்திருந்தேன். இந்தச் சூழ்நிலையில் என் பள்ளி ஆசிரியர்கள் இயேசுவைப் பற்றிக் கூறிய செய்திகளும், நான் சென்ற ஆலயத்தில் சொல்லப்பட்ட வசனங்களும், அதற்கான விளக்கங்களும் செய்திகளும் சாட்சிகளும் எனக்கு ஒருவிதமான ஆச்சரியத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தின.

**சரி.. உங்கள் ஆலய அனுபவங்களைப் பற்றிக் கூறுங்களேன்...**

முன்பெல்லாம் எனக்கு ஆலயத்திற்கு செல்வது பிடிக்கவே பிடிக்காது. அதிலும் பைபிளை கையில் எடுத்துக் கொண்டு ஆலயத்திற்கு சென்றால், மற்றப் பிள்ளைகள் என்னைக் கேலி செய்வார்களே என்று நினைத்து பைபிளை எடுத்துச் செல்ல விரும்பமாட்டேன். ஆனால் என்னுடைய அம்மா பைபிள் எடுத்துக்கொண்டு தான் ஆலயத்திற்கு செல்லக்

கட்டாயப்படுத்துவார்கள், அதனால் அம்மா சொல்கிறார்களே என்று கடமைக்காக ஆலயத்திற்கு செல்வேன். ஆலயத்தில் வசனங்களை வாசிக்கும்பொழுதும் கடமைக்காகப் பைபிளை திறந்து மட்டும் வைத்திருப்பேனேத் தவிர வசனத்தைப் படிக்கவோ போதகர் சொல்வதை கவனிக்கவோ மாட்டேன்.



**சரி, ஆலயத்திற்கு சென்று வந்த போதும் இயேசுவை ஏற்றுக் கொள்ளாத நீங்கள் எப்படி இயேசுவை அறிந்து கொண்டீர்கள்?**

நான் சிறப்புப் பள்ளிக்குச் சென்றபின்பு தான் எனக்குப் பைபிள் என்பது வெறும் காகித புத்தகம் இல்லை என்றும், அதில் உள்ள ஒவ்வொரு வார்த்தைகளும் கடவுள் நமக்காகக் கூறிய நல்வார்த்தைகள் என்பதையும் இயேசு நமக்காக இந்த மண்ணில் பிறந்து, நம்முடைய பாவங்கள், சாபங்கள் அனைத்தையும் நமக்காகத் தன்னுடைய தோளில் சுமந்து, நமக்காகச் சிலுவையில் மரித்து மூன்றாம் நாள் சாத்தானை ஜெயித்து மரணக் கட்டை உடைத்து எறிந்து, மீண்டும் உயிர்த்தெழுந்தார் என்றும், அவர் இப்பொழுதும் நம்மோடு இருக்கிறார் அவர் அற்புதங்களைச் செய்கிறார் என்பதையும்நான்அறிந்துகொண்டேன். இவையெல்லாம் எனக்கு மிகவும் ஆச்சரியமாகவும் அதே வேளையில் நம்ப முடியாததாகவும் இருந்தது.

**சூப்பர்... இயேசுவைப் பற்றி அறிந்து கொண்டீர்கள்... அதற்குப் பிறகு உங்களுடைய வாழ்க்கையில் நிகழ்ந்த மாற்றங்கள் என்ன?**

நான் பத்தாம் வகுப்பு படிக்கும்போது திடீரென்று என் உடம்பில் ஒரு பிரச்சனை ஏற்பட்டது. காரணமில்லாமல் அடிக்கடி எனக்கு மயக்கம் வந்து அப்படியே மயங்கி விழுவேன். அப்பொழுது என் உடம்பில் எந்தவித அசைவும் இருக்காது, உடம்பெல்லாம் குளிர்ந்து போய்விடும். மயக்கம் தெளிவதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் ஆகும். இதனால் என் பெற்றோர்கள் என்னை நினைத்து மிகவும் வருத்தப்பட்டனர். என் அப்பா அம்மா எனக்காக அழுது ஜெபிப்பார்கள். மருத்துவமனைக்குச் சென்றபோது என்னை மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு, என் உடலில் எந்தப் பிரச்சனையும் இல்லை என்று கூறினார்கள். ஆனால் மயக்கம் வருவது மட்டும் நிற்கவே இல்லை. எத்தனையோ மருத்துவர்களைப் பார்த்தோம், எவ்வளவோ ஸ்கேன் மற்றும் பரிசோதனைகளைச் செய்தும் அவர்களால் என்ன பிரச்சனை என்று கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் தினமும் மூன்று வேளை மருந்து மாத்திரைகள் மட்டும் கொடுத்தனர். தினமும் எட்டு மாத்திரைகள் என அந்த ஆண்டு முழுவதும் கணக்கில்லாமல் மாத்திரைகளைச் சாப்பிட்டேன். அதனால் பல பக்க விளைவுகள் ஏற்பட்டதோடு, என் படிப்பும் பாதிக்கப்பட்டது. ஆனால் மயக்கம் வருவது மட்டும் நிற்கவில்லை.



**சரி... இந்தப் பெலவீனம் எப்போது மாறியது? தேர்வை நல்ல முறையில் எழுதினீர்களா?**

பத்தாம் வகுப்பு அரசுத் தேர்வுக்கு ஒரு மாதத்திற்கு முன்பு மீண்டும் மயக்கம் வந்தது. அதனால் பள்ளியிலிருந்து வீட்டுக்குச் சென்றேன். திரும்பப் பள்ளிக்குச் செல்லவும், தேர்வு எழுதவும் எனக்குப் பயமாக இருந்தது. நான் என்ன பாடம் படித்திருக்கிறேன், எவ்வளவு படித்திருக்கிறேன் என்று எனக்கு எதுவும் தெரியவில்லை. அதனால் எப்படி என்னால் தேர்வு எழுத முடியும்? ஒருவேளை தேர்வு நேரத்தில் மீண்டும் மயக்கம் வந்தால் என்ன செய்வது என்று பயந்து




பள்ளிக்குச் செல்லாமல் வீட்டிலேயே இருந்தேன். அப்படி ஒருநாள் வீட்டிலிருந்து மொபைல் பார்த்துக் கொண்டிருந்தபோது, **Achievers Meeting**ல் நிறைய மாணவர்கள் வியாதியின் மத்தியிலும் தேர்வு எழுதிச் சாதித்த சாட்சிகள் தொடர்பான வீடியோக்களைப் பார்த்தேன். அந்தச் சாட்சிகளும் செய்திகளும் எனக்கு ஒரு பெரிய நம்பிக்கையைக் கொடுத்தது. அன்று இரவே இயேசப்பாவிடம் ஜெபிக்க முழங்கால்படியிட்டேன். மனம் மிகவும் பாரமாக இருந்தது. என்ன சொல்லி ஜெபிக்க வேண்டும், எப்படி ஜெபிக்க வேண்டும் என்று தெரியவில்லை என்பதால் அப்படியே அழுது கொண்டே இருந்தேன். கடைசியில் எவ்வளவு நேரம் அழுதுகொண்டே இருப்பது என்று ''**I am sorry Jesus** எனக்குப் பயமாக இருக்கிறது, எனக்கு உதவி செய்யுங்க'' என்று இந்த மூன்று விஷயத்தையும் கூறிவிட்டு படுத்துத் தூங்கிவிட்டேன். மறுநாள் காலையில் என் மனது மிகவும் லேசாக இருப்பதை உணர்ந்தேன். என்னையே அறியாமல் எனக்குள் ஒரு புத்துணர்ச்சியும் தைரியமும் நம்பிக்கையும் வந்திருந்தது. பள்ளிக்குச் செல்லக் கூடாது என்று நினைத்த நான், அதிகாலையில் பைபிள் படித்து ஜெபித்தேன் படிக்கும் ஒவ்வொரு புக் மீதும் கை வைத்து ஜெபித்தேன். அன்று வேகமாகப் பள்ளிக்கும் சென்றேன். ''இயேசப்பா என்னைப் படிக்க வைங்க, என் கூடவே இருந்து, என் கூடவே சேர்ந்து தேர்வு எழுதுங்க'' என்று ஜெபித்தேன். பத்தாம் வகுப்புத் தேர்வு முடிந்து ரிசல்ட் வந்தபோது **500க்கு 478** மதிப்பெண்கள் எடுத்துப் பள்ளியில் முதல் மாணவியாக வருவதற்கு இயேசப்பா கிருபை செய்தார்.



**சூப்பர்... வியாதியின் மத்தியிலும் 10ஆம் வகுப்பில் Achiever ஆக மாறிய நீங்கள் தொடர்ந்து நன்றாகப் படித்தீர்களா?**

11ஆம் வகுப்பு பள்ளிக்குச் சென்றேன். எல்லாம் நன்றாகச் சென்று கொண்டிருந்தது. சில மாதங்களுக்குப் பிறகு என் விசுவாசத்தில் குறைவு ஏற்பட ஆரம்பித்தது. ஜெபிப்பதிலும் பைபிள் வாசிப்பதிலும் இருந்த தாகம் குறைய தொடங்கியது. நாளைக்கு ஜெபிக்கலாம், நாளைக்கு பைபிள் வாசிக்கலாமெனத் தள்ளிப் போட ஆரம்பித்தேன். நாளடைவில் பைபிள் வாசிக்கவும் ஜெபிக்கவும் மறந்துவிட்டேன். இதனால் மீண்டும் அதே மயக்கப் பிரச்சனை வந்தது. அது முன்பைக் காட்டிலும் மிகவும் தீவிரமாக இருந்தது. பாதி நாட்கள் மருத்துவமனையில் தான் இருந்தேன். 2024 ஜனவரி 26 **Achievers meeting** நடக்கும்போது, நான் மருத்துவமனையில் தான் இருந்தேன். என் பள்ளியிலிருந்து மீட்டிங் சென்ற பிள்ளைகள் எல்லோரும் அங்கு நடந்த விஷயங்களைச் சொன்னபோது தான், எனக்கு நான் செய்த பெரிய பாவம் புரிந்தது. மீண்டும் இயேசுவின் பாதத்தில் கண்ணீரோடு அழுது ஜெபித்தேன்.

புதிர் : பெனிட்டா

''இயேசப்பா என் தவறை மன்னிச்சிடுங்க, இனி நான் இந்த மாதிரித் தவறு செய்யமாட்டேன், உங்களுக்குப் பிரியமான மகளாக இருப்பேன், எங்க அம்மா அப்பா என்னை நினைத்து மிகவும் வருத்தப்படுகிறார்கள், அதனால் என்னை மன்னித்து என் பிரச்சனையைச் சரி செய்திடுங்க, அடுத்த வருடம் நான் **Achievers meeting**ல் சாட்சி சொல்வேன்'' என்று ஜெபித்தேன். இயேசு என் தவறை மன்னித்து, என்னை அவருடைய மகளாக ஏற்றுக் கொண்டார். என் பிரச்சனையைச் சரிசெய்து, 11ஆம் வகுப்பில் **600/538** மதிப்பெண்கள் தந்து மீண்டும் என்னைப் பள்ளியில் முதல் மாணவியாகக் கொண்டு வந்தார். நான் விரும்பியபடியே ஜனவரி 26 **Achievers meeting**ல் சாட்சி சொல்லக் கிருபை செய்தார்.



**சூப்பர்... Achiever ஆன நீங்கள் தொடர்ந்து 12ஆம் வகுப்பில் எவ்வளவு மதிப்பெண்கள் எடுத்தீர்கள்? தொடர்ந்து என்ன படிக்கிறீர்கள்?**

அதன் பிறகு 12ஆம் வகுப்பு முழுவதும் எந்தப் பிரச்சனையும் இல்லாமல் தேர்வு எழுதவும் **600க்கு 547** மதிப்பெண்கள் எடுத்து மீண்டும் பள்ளியில் முதல் மாணவியாக உயர்த்தி ஆசீர்வதித்தார். இப்பொழுது நான் ஒரு நல்ல கல்லூரியில் மேற்படிப்பு படித்து வருகிறேன். அன்று முதல் இன்று வரை எனக்கு உடலில் எந்தப் பிரச்சனையும் இல்லை. என் பாவங்களை மன்னித்து என் பிரச்சனைகள் அனைத்தையும் சரி செய்து என்னை மேன்மையான இடத்திற்கு உயர்த்திய என் தேவனுக்கு உண்மையாய் இருக்க தேவன் கிருபை செய்து வருகிறார். தேவனுக்கே மகிமை...!









# உன்னால் முடியும்!!



செய்தி:
மோகன் சி. லாசரஸ்


"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி. 4:13).



**கா**ல்பந்து விளையாட்டில் மிகவும் பிரபலமான விளையாட்டு வீரர்களைக் கொண்டது பிரேசில் நாடு. FIFA கால்பந்தில் விளையாடிச் சாதிக்கிறவர்கள் உலகப் பிரசித்தி பெற்றவர்களாக மாறி விடுவார்கள். பிரேசில் நாட்டில் உள்ள ''காகா'' (ரிக்கார்டோ இசேக்சன் டோஸ் சான்டோஸ் லேய்டே - காகா-வின் முழுபெயர்) என்கிற வாலிபனுக்குள் FIFA கால்பந்தில் விளையாடிச் சிறந்த விளையாட்டு வீரனாகி சாதிக்க வேண்டுமென்ற கனவு இருந்தது. உலக அளவில் விளையாடிச் சாதிக்க வேண்டுமென்ற கனவோடு பயிற்சி எடுத்து வரும் அந்தக் காலகட்டத்தில், 2000ஆம் வருடத்தில் ஒரு நீச்சல் குளத்தில் தவறி விழுந்து முதுகுதண்டு உடைந்து படுத்த படுக்கையாகிவிட்டான். நீ எழும்பி நடப்பதே இனி கஷ்டம், இனி உன்னால் கால்பந்து விளையாட முடியாது என மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். உலக அளவில் விளையாடிச் சாதிக்க வேண்டும் என்ற கனவோடு இருந்த அவனுக்குள் இது பயங்கர அதிர்ச்சியை உண்டாக்கியது. அவனால் சாதிக்க முடியாது என்று மிகவும் சோர்ந்து போனான். ஆனாலும் அவன், சாதிக்கவேண்டுமென்ற வெறியால் கடுமையான சிகிச்சைகள் எடுத்து ஒரு வருடத்தில் திரும்பவும் மைதானத்தில் விளையாட ஆரம்பித்தான். எல்லோரும் அவனை ஆச்சரியமாகப் பார்த்தார்கள். விளையாட்டில் பல பயிற்சிகள் எடுத்தான். 2007ஆம் வருடம் உலக அளவில் நடந்த FIFA விளையாட்டில் விளையாடி **"Best Player Award"**-ஐ தட்டிச் சென்றான். எப்படி உங்களால் சாதிக்க முடிந்தது என்று கேட்டதற்கு, ''இயேசு கிறிஸ்து நாம் கேட்பதை விட அதிகமாகவே கொடுக்கிறார்'' என்பது விருதை வாங்கியதும் அவன் சொன்ன வாசகம். விபத்திலிருந்து மீண்டபின்பு அவருக்கு இயேவின்மேல் உள்ள விசுவாசம் பலமடங்கு அதிகரித்தது.

ஆண்டவர் எப்படியெல்லாம் உங்களைப் பெலப்படுத்தி சாதனையாளராக மாற்றப் போகிறார் என்று சில காரியங்களை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்:

# பயத்தை நீக்குவார்!



என்னால் வெற்றிபெற முடியுமா, என்னால் இவ்வளவு மதிப்பெண்கள் எடுக்க முடியுமா! என் பெற்றோர், நான் பள்ளியில், மாவட்டத்தில் முதல் மாணவியாய்/மாணவனாய் வருவேன், முதல் ரேங்க் எடுப்பேன் என்று எதிர்பார்க்கிறார்கள். என்னால் அவ்வளவு மார்க் எடுக்க முடியுமா! என்கிறதான பயம் தான் உங்களைப் படிக்கவிடாதபடி தடுக்கிறது. இந்தப் பயத்திற்குப் பின்னால் இருந்து செயல்படுவது சாத்தான். இயேசு உங்களைச் சாதனையாளர்களாக மாற்ற விரும்புகிறார், சாத்தான் உங்களுக்குள் பயத்தை விதைத்து, உங்களை அடிமையாக்கி உங்கள் படிப்பைக் கெடுத்து நீங்கள் ஜெயிக்க முடியாதபடி அவன் போராடுவான். ''நீ பயப்படாதே. நான் உன்னோடு கூட இருக்கிறேன்'' (ஏசாயா 41:10) என்று ஆண்டவர் சொல்கிறார். ''பயப்படாதே நான் உன்னுடன் இருக்கிறேன், தைரியமாய் எழுது'' என்று உற்சாகப்படுத்துவார். இயேசுவின் பிரசன்னம் நமக்குள் ஒரு மனதைரியத்தைக் கொடுக்கும்.

# ஞாபக மறதியை மாற்றுவார்!



நிறைய பேருக்கு, படிக்கிறது மறந்து போகிறதே என்கிற பிரச்சனை இருக்கிறது. ஆண்டவர் ஞாபக மறதியை மாற்றுகிற தேவன்.ஒரு சமயம் ஒரு தாயார் தன் மகளை அழைத்துக் கொண்டு ஜெபிக்க வந்தார்கள். என்னவென்று கேட்டபோது, ''நான் இரவு முழுவதும் நன்றாகத்தான் படிக்கிறேன், காலையில் எழுந்தால் எல்லாம் மறந்து போய்விடுகிறது அங்கிள்'' என்று தேம்பி தேம்பி அழுதாள். என் இருதயம் நொறுங்கிப் போனது. ''பயப்படாதே, ஆண்டவர் உனக்கு ஞாபக சக்தியைத் தருவார்'' என்று சொல்லி ஜெபித்து அனுப்பி விட்டேன். சில நாட்களுக்குப் பிறகு, சிரித்த முகத்துடன் என்னைப் பார்க்க வந்தாள். ''அங்கிள்! நான் இங்கு வந்துப் போனபின்பு எல்லா பாடமும் எனக்கு நல்லா ஞாபகத்தில் இருக்கிறது. அந்த மறதி என்கிற பிரச்சனை மாறிவிட்டது. இப்போது நல்ல ஞாபக சக்தியை ஆண்டவர் எனக்குக் கொடுத்திருக்கிறார், நான் எழுதின தேர்வில் வெற்றி பெற்றிருக்கிறேன்'' என்று மகிழ்ச்சியோடு அவள் சொன்னாள். ஞாபக மறதி பிரச்சனையோடு இருக்கிற உனக்கும் நல்ல ஞாபக சக்தியைக் கொடுப்பார்.



# ஜெயம் தருவார்!

''ஜெயமோ கர்த்தரால் வரும்'' என நீதிமொழிகள் 21:31-ல் வாசிக்கிறோம். நீங்கள் அதிக மார்க் எடுத்து ஜெயிப்பீர்கள். அந்த ஜெயத்தைத் தருகிறவர் ஆண்டவர். அவரால் உங்களுக்கு ஜெயம் கொடுக்க முடியும். நீங்கள் விசுவாசித்தால் போதும். ''நான் உங்களைப் பெலப்படுத்துவேன்'' என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை, இந்த நாளிலிருந்து விசுவாசித்து உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள். உங்களைப் பெலப்படுத்தி சாதனையாளராக மாற்றுவார்.

**அன்பான வாலிபர்களே, நான் நன்றாகப் படிப்பேன். நன்றாகத் தேர்வு எழுதுவேன். நிறைய மார்க் எடுப்பேன். மேல்படிப்பிற்கு போவேன். நீட் தேர்வே வந்தாலும் அதிலும் நான் எழுதுவேன். என்னால் சாதிக்க முடியும். நான் ஒரு டாக்டராக, இஞ்சினியராக, விஞ்ஞானியாக இந்தியாவிற்கே ஆசீர்வாதமாக மாறுவேன். இயேசு என்னைப் பெலப்படுத்துவார்! என்னை ஆசீர்வதிப்பார் என்று விசுவாசியுங்கள்! கட்டாயம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டு ஜெயிப்பீர்கள்!!**

முகப்பு செய்தி: சதீஷ்




# அசதியாயிராதே!!

இன்றைய வேகமான உலகில் வாலிபர்கள் பல சவால்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. படிப்பு, வேலை, ஊழியம், சமூக வலைத்தளங்கள், தொழில்நுட்பம் என எல்லாவற்றிலும் ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டிய அவசியம் உள்ளது. ஆனால் நாம் அசதியாக இருந்து, நாளைப் பார்த்துக் கொள்ளலாம், இப்பொழுது நேரம் இல்லை என்று சொல்லி இன்று செய்ய வேண்டியதை நாளைக்குத் தள்ளிப் போடும்போது, நாம் எதிர்பார்த்த வெற்றியைப் படிப்பிலும் வேலையிலும் ஊழியத்திலும் பெற முடியாது. அசதி என்பது சோம்பேறித்தனம் மட்டுமல்ல, கவனக்குறைவு, பொறுப்பற்றத் தன்மை, எதிர்காலத்தை அலட்சியப்படுத்துவது எனச் சொல்லிக்கொண்டே போகலாம்.

படிக்கும்போது படிப்பில் கவனம் செலுத்தாமல், காலத்தை வீணாக்கும்போது, வாழ்க்கையைப் பாதிப்பதும் மட்டுமன்றி, நமது இலட்சியத்தையும் பாதிக்கிறது. உலகத்தில் வெற்றி பெற்று சாதித்தவர்களின் வாழ்க்கையை பாருங்கள்; அவர்கள் ஒருபோதும் அசதியாக இருந்திருக்க மாட்டார்கள். தோல்விகள் வந்த போதும், அவர்கள் ஓயவில்லை. சோர்வுகள் வந்த போதும் சோர்ந்து போகாமல் எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றனர். இதுமட்டுமின்றி அவர்கள் காலத்தைப் பிரயோஜனப்படுத்தி வாய்ப்புகளைச் சரியாய் பயன்படுத்தி வாழ்க்கையின் உயர்ந்த நிலைக்கு அடைந்துள்ளனர்.

உலகமே இந்திய கிரிக்கெட் அணியைத் திரும்பிப் பார்க்கும் அளவிற்கு ஒரு சிறந்த கேப்டனாகவும் விளையாட்டு வீரனாகவும் விளங்கிய தோனி, சாதாரண குடும்பத்தில் பிறந்தாலும் தனது இலட்சியத்தை அடைவதற்கு மிகுந்த ஜாக்கிரதையுடன் செயல்பட்டார். இரயில்வே டிக்கெட் கலெக்டராக வேலை செய்தாலும், அசதிக்கு இடங்கொடுக்காமல், அனுதினமும் கிரிக்கெட் பயிற்சியைத் தொடர்ந்து செய்தும், தனக்குக் கிடைத்த நேரத்தையும் வாய்ப்பையும் சரியாகப் பயன்படுத்தியும் இந்திய அணிக்குத் தேர்வானார். ஆரம்பத்தில் சில



போட்டிகளில் தோல்வி, விமர்சனங்கள் என வந்தாலும் எதைப்பற்றியும் கவலைப்படாமல், அடுத்தடுத்து போட்டிகளில் கவனமாகவும் ஜாக்கிரதையாகவும் விளையாடியதால் சிறந்த வீரராகவும் தலைவராகவும் மாறியது மட்டுமல்லாமல், இந்திய கிரிக்கெட் அணியைப் புதிய மைல்கள் எட்டும்படி செய்தார்.

**"அசதியானவன் பட்டினியாயிருப்பான்"** (நீதி. 19:15). அசதியாக இருந்தால் வாய்ப்புகள் நம்மை விட்டு விலகிவிடும். எனவே வாலிப வயதில் அசதியாக இராமல் தேவன் தரும் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள ஜாக்கிரதையாயிருங்கள். அப்பொழுது படிப்பிலும் வேலையிலும் நீங்கள் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்.



இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தவும் பாதுகாக்கவும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு அபிஷேகம் பண்ணப்பட்ட சிம்சோன் ஆண்டவருடைய எச்சரிப்புகளை அலட்சியப்படுத்தி அசதியாக இருந்ததினால், பாவத்தில் விழுந்து, பெலிஸ்தர் கையில் பிடிபட்டான். **"பெலிஸ்தர் அவனைப் பிடித்து, அவன் கண்களைப் பிடுங்கி அவனைக் காசாவுக்குள் கொண்டு போய், அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குப் போட்டுச் சிறைச்சாலையில் மாவரைத்துக் கொண்டிருக்க வைத்தார்கள்"** (நியா.16:21). ஜனங்களை வழிநடத்த வேண்டியவன், அசதியாய் இருந்ததால் பலருக்கும் வேடிக்கைக் காட்டும் மனிதனாகிப் போனான். ஆண்டவர் அவனுக்கு அழைப்பையும் அபிஷேகத்தையும் வரங்களையும் கொடுத்தும் அசதி அவனுக்குள் இருந்ததால் அனைத்தையும் இழக்க செய்தது.

**"என் குமாரரே, இப்பொழுது அசதியாய் இராதேயுங்கள்: நீங்கள் கர்த்தருக்கு பணிவிடை செய்யும்படி அவருக்கு முன்பாக நிற்கவும், அவருக்கு ஊழியம் செய்கிறவர்களும், தூபம் காட்டுகிறவர்களுமாயிருக்கவும் உங்களை அவர் (இயேசு) தெரிந்துகொண்டார்"** (2 நாளா 29:11). நீங்கள் ஜெபத்திலும் விசுவாசத்திலும் பரிசுத்த வாழ்க்கையிலும் அசதியாக இருந்தால், ஆண்டவர் உங்கள்மீது வைத்திருக்கிற திட்டம் வீணாகிவிடும். யோசேப்பு, ஆண்டவர் அவன்மீது வைத்திருந்த திட்டத்தையும் நோக்கத்தையும் நன்கு அறிந்திருந்தான். அதனால் தான், அவன் தன்னுடைய வாழ்க்கையில் ஏமாற்றங்களும் இழப்புகளும் தோல்விகளும் பழிசொல்லும் வந்தபோதும், சோர்ந்து போகவில்லை. தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பை அசதியாகச் செய்யவும் இல்லை. எல்லா சூழ்நிலையிலும் ஆண்டவரை விசுவாசித்து, ஜாக்கிரதையுடன் செயல்பட்டான். யோசேப்பின் ஜாக்கிரதையுள்ள வாழ்க்கையும் விசுவாசமும் அவனை எகிப்துக்கு பிரதமராக உயர்த்தியது. அடிமையாக விற்கப்பட்டவன், ஆட்சியாளராக மாறினான்.

வாலிபனே **"நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களை பின்பற்றுகிறவர்களாயிருந்து, உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவு பரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்"** (எபி. 6:11,12).

**எனக்கன்பான வாலிபர்களே, உங்கள் வாழ்க்கையில் பலவிதமான சோதனைகளும் சவால்களும் இருந்தாலும், கவலைப்படாதிருங்கள். யோசேப்பை போல ஜெபத்தில் உறுதியாக இருந்து, அசதியை விட்டு, ஜாக்கிரதையுள்ளவர்களாக இருந்தால், உங்கள் வாழ்க்கையின் திசை மாறும். தேவன் ஏற்றக் காலம் வரும்போது, நிச்சயம் உங்களை உயர்த்துவார். அசதியாயிராமல், ஜாக்கிரதையாய் இருங்கள்!!**




# அழுத்தத்தின் கீழ்!!

நிகழ்வு: ஜெனிபர்

Hello friends, எல்லாரும் எப்படி இருக்கீங்க? இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!!

அழுத்தத்தின் கீழ் என்னும் இத்தொடரில் உங்களைச் சந்திப்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி! இந்த உலகில் நாம் அநேக அழுத்தமான சூழல்களைச் சந்திக்க நேரிடும். கவலை, பயம் என்ற ஏதோ ஒரு அழுத்தம் நம்மை அழுத்திக் கொண்டே இருக்கும். ஆனால் அந்த அழுத்தத்தை எப்படி மேற்கொள்கிறோம்?

உண்மை என்னவென்றால் அழுத்தத்தின் கீழ் உருவாக்கப்படும் எந்தப் பொருளும் விலையேறப்பெற்றதே! அப்படி உருவாக்கப்படும் ஒலிவ எண்ணெயைப் பற்றிப் பார்ப்போமா?

## சரி வாங்க தொடருக்குள் போகலாம்... ஒலிவ எண்ணெய் எப்படி தயாரிக்கப்படுகிறது என்று தெரியுமா?




முதலாவது பழுத்த புதிய ஆலிவ் விதைகளைத் தேர்வெடுத்து அதில் உள்ள அழுக்கு மற்றும் இலைகளை அகற்றுவதற்கு நன்கு கழுவுவார்கள்.




கழுவிய ஆலிவ் விதைகள் factoriesகளில் உள்ள பெரிய பெரிய ஆலை கற்களின் கீழ் நன்றாக நசுக்கப்படும்.




நொறுக்கப்பட்ட ஆலிவ் விதைகள் paste ஆக மாறும் வரை நன்றாகக் கலக்கப்படும்.




Paste ஆக மாறியவுடன், பெரிய கனமான அழுத்தியை (Press) வைத்து பிழிந்து எடுக்கப்படும்.




பிழிந்து எடுக்கப்பட்ட தண்ணீர் இரவு முழுவதும் பல மணி நேரம் ஒரே இடத்தில் எண்ணெய் மேலே உயரும் வரை வைக்கப்படும்.




பின்னர் அதிநவீனமான ஒலிவ எண்ணெய் பயன்பாட்டிற்காகத் தயாராகிறது.

**அடேங்கப்பா ஒலிவ எண்ணெய் தயாரிக்கப்பட இவ்வளவு process ஆ? அதுவும் சாதாரண process கிடையாது! அடிக்கு மேல அடி விழுகிற process. பாருங்க.**

**ஒலிவ எண்ணெய் கிடைக்கனும்னா அந்த ஆலிவ் விதைகள் கழுவப்படணும், நசுக்கப்படணும் நொறுக்கபடணும், இடிக்கப்படணும், பிழியப்படணும். இது வலி மிகுந்த process தான். ஆனால் இப்படி பிரித்து எடுக்கப்பட்ட ஒலிவ எண்ணெய் எங்குப் பயன்படுத்தப்படும் தெரியுமா?**



(குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும்படி அதற்காக இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயை இஸ்ரவேல் புத்திரர் உன்னிடத்தில் கொண்டுவரும்படி அவர்களுக்குக் கட்டளையிடு, ஆசரிப்புக் கூடாரத்தில் சாட்சி சந்நிதியின் திரைக்கு வெளிப்புறமாக ஆரோன் அதை எப்பொழுதும் சாயங்காலம் தொடங்கி விடியற்காலம்மட்டும் கர்த்தருடைய சந்நிதியில் எரியும்படி ஏற்றக்கடவன், இது உங்கள் தலைமுறைதோறும் செல்லவேண்டிய நித்திய கட்டளை) என்ற வசனம் உண்டு இப்போ தெரியுதா friends,

**ஏன் olive Seeds இவ்வளவு processகுள்ள போகணும்?**

கர்த்தருடைய சந்நிதியில் விளக்கு எப்பொழுதும் எரியும்படி பயன்படுத்தப்பட இந்த இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெய் தேவை! ஒரு எண்ணெய்க்கே இவ்வளவு **process**னா கர்த்தருடைய சந்நிதியில் எழுப்புதலுக்காகப் பயன்படுத்தப்படவும் எப்பொழுதும் எரிந்து பிரகாசிக்கிற விளக்காய் இருக்கவும் தெரிந்து கொள்ளப்பட்ட நமக்கும் இது அழுத்தமான, கடினமான **process** தான் ஆனால் அழுத்தத்தில் அமிழ்ந்து போவதற்கு அல்ல, உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட. எப்படி ஒலிவ எண்ணெய் தயாரிக்கப்பட ஒலிவ விதைகள் முதலாவது கழுவப்பட வேண்டுமோ, அதே போல நாமும் தேவனுக்காய் பயன்படுத்தப்பட தேவனால் கழுவப்படுகிறோம்.

அதுமட்டுமல்லாமல் அவைகள் எப்படி நொறுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு அழுத்தத்தின் கீழ் வைக்கப்பட்டு பிழிந்து எடுக்கப்படுகிறதோ அதுபோல் நொறுக்கப்படுகிற அநேக சூழல்களுக்கு ஆண்டவர் நம்மை அனுமதிப்பார்.

எப்படி வடிக்கப்பட்ட தண்ணீர் இரவு முழுவதும், எண்ணெய் மேலே உயரும் வரை வைக்கப்படுகிறதோ அதேபோலத் தேவன், பரிசுத்த ஆவியானவர் என்னும் எண்ணெய் அபிஷேகம்
நம்மில் உயரும் வரை இருளான சூழ்நிலைகளுக்குள் அனுமதிப்பார்.

**ஆனால் இருள் நிரந்தரம் அல்லவே முடிவு ஆரோக்கியமான ஒலிவ எண்ணெய் கிடைப்பது போல, கிறிஸ்துவின் வல்லமை நம்மிலிருந்து வெளிப்படத்தக்கதாய் கிறிஸ்துவின் வாசனையை வீசத்தக்கதாய் ஜீவ நதியாய் நாமும் மாறி இருப்போம், தேவனின் கரத்தில் விலையேறப் பெற்ற பாத்திரமாய் மாறியிருப்போம்.**

**So, ஞாபகம் வச்சுக்கோங்க அழுத்தம் அமிழ்ந்து போக அல்ல; உருவாக்கப்படவோ உருவடிக்கப்பட மட்டுமல்ல பயன்படுத்தப்படவே!**

(மீண்டும் சந்திப்போம்)



# அறிவியலும் வேதாகமும்

தகவல்: ஜெனிபர்

*Hi friends,*

**எல்லாரும் சந்தோஷமா இருக்கீங்களா? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!**

**அறிவியலும் வேதாகமமும் என்னும் இத்தொடரில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.**

நம்மைச் சுற்றி நடக்கும் அனைத்து விஷயங்களுக்குப் பின் ஏன் இப்படி நடக்கிறது என்று அதற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ளவதில் அனைவரும் ஆசைப்படுவோம் அல்லவா? உதாரணமாக ஒரு கடலைப் பார்க்கும்போது அது ஏன் நீல நிறமாக உள்ளது? பறவைகள் மட்டும் ஏன் பறக்கின்றன?




நம்மைச் சுற்றி நிகழும் அனைத்து விஷயங்களுக்குப் பின்பாகவும் அறிவியல் சார்ந்த உண்மைகள் உள்ளன. அவைகளைப் பற்றி நாம் யோசிக்கும்பொழுது அது ஆண்டவரோடு நம்மை இணைக்கவும் செய்கிறது.

**Ok friends,** இந்த மாதம் நாம் **floating, sinking** பற்றிப் பார்க்கப் போகிறோம்.

என்னங்க யோசிக்கிறீங்க? வாங்க தொடருக்குள் போகப் போக உங்களுக்கே புரியும்.

நீங்க ஒரு **bucket** நிறைய தண்ணீர் எடுத்து அதில் லேசான பொருட்களையும், பின் கனமான பொருட்களையும் போடுங்க. என்ன நடக்கும்?

இதில் லேசான பொருட்கள் தண்ணீரில் மிதக்கும். கனமான பொருட்கள் தண்ணீரில் மூழ்கும் அப்படித்தான?

இத தான் **floating, Sinking**னு சொல்லுவாங்க.

எதனால இப்படி நடக்கிறது? இதற்குப் பின்னால் என்னதான் **Scientific fact** இருக்கு? பார்க்கலாமா.

அதாவது தண்ணீருக்குள் போடப்படும் பொருள் தண்ணீரை விட அடர்த்தி **(Density)** குறைவாக இருந்தால் அது மிதக்கும். ஒருவேளை அந்தப் பொருள் தண்ணீரை விட அடர்த்தி அதிகமாக இருந்தால் அது மூழ்கும்.

### *இதுல இன்னொரு Interesting fact என்ன தெரியுமா friends?*

தண்ணீரில் எந்தப் பொருள் மிதந்தாலும் அதற்கான முக்கிய காரணம் என்ன வென்றால், தண்ணீருக்குள் உருவாகும் மேல் நோக்கிய உந்துதல் என்னும் **force** தான். இதை **upward thrust** அல்லது மிதப்பு விசைனும் சொல்லுவாங்க.

இதுதான் பொருட்களைத் தண்ணீரில் மூழ்க விடாமல்  மிதக்கச் செய்யும். புவியீர்ப்பு விசையை எதிர்த்துப் போராட செய்யும்.

இந்த **Force** பொருளின் எடையைவிட அதிகமாக இருந்தால், அந்தப் பொருள் மிதக்கும்; இல்லையெனில், அந்தப் பொருள் புவியீர்ப்பு விசையின் காரணமாக மூழ்கிவிடும்.

**Wow.** பார்த்தீங்களா **friends.** இது ஆண்டவரோட எவ்வளவு அற்புதமான படைப்புனு?  நம்முடைய கண்களுக்குத் தெரியவில்லை என்றாலும் தண்ணீருக்குள் இப்படியொரு அற்புதமான forceஐ ஆண்டவர் கொடுத்திருக்கிறார்.

### சரி இதெல்லாம் ஏன் சொல்றீங்கன்னு கேக்குறீங்களா *friends*?



நாமும் அந்த லேசான பொருட்களைப் போலப் பலவீனமானவர்களாக இருக்கலாம். லேசான பொருள் பலமான காற்று வீசும்போது காற்றினால் அடிக்கப்பட்டு போகும். கனமான பொருளோ **Strong**ஆக இருக்கும். ஆனால் தண்ணீர் என்று வரும்போது பார்த்தீர்களா அப்படியே நிலைமையே தலைகீழாக மாறிவிடுகிறது.

இதுபோலத் தான், நம் இதயத்திற்குள்ளாகப் பாவம், உலக ஆசை இச்சைகள் அல்லது கவலைகள் பயங்கள் போன்றவை கனம் அதிகமாக இருந்தால் நாம் வாழ்க்கை என்னும் போராட்டத்தில் மூழ்கி விடுவோம்.

### அப்படித்தான் ஒரு சில நேரங்களில் மூழ்கி விடுகிறோம் அல்லவா?

ஆனால் இதிலிருந்து உதவி செய்யவே அந்தத் தண்ணீருக்குள் உருவாகும் **force** பொருட்களை மிதக்கச் செய்வது போல, பரிசுத்த ஆவியானவர் (அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார் (ரோமர் 8:26) என்ற வசனத்தின்படி  இந்த உலகத்தில் நம்மை ஈர்க்கும் பாவ ஆசைகளுக்குள்ளும், மற்ற பலவீனங்களுக்குள்ளும் மூழ்க விடாமல் நம்மை மேல் நோக்கி உந்த செய்து இந்த வாழ்க்கை என்னும் போராட்டத்தில் மிதக்கச் செய்வது மட்டுமின்றி ஜெயத்தையும் தருகிறார்.

**ஒருவேளை நான் வாழ்க்கையில் விழுந்து கொண்டே இருக்கிறேன்.பாவ சோதனைகளை ஜெயிக்க ஆசைப்பட்டாலும் என்னால் முடியவில்லை என்று கலங்குகிறீர்களா?அல்லது பாடுகள் வரும்பொழுது நான் சோர்ந்து போய்விடுகிறேன் என்னால் ஜெபிக்க முடியவில்லை என்று கலங்குகிறீர்களா? கவலைப்படாதீர்கள்  பரிசுத்த ஆவியானவரிடம் உதவி கேளுங்கள் அவர் உங்களை மூழ்கவிடாதபடி கட்டாயமாக மேற்கொள்ள வைப்பார். ஆமென்.**



சிந்திக்க : ரோஸ்லின்

# சோர்ந்து போனவர்கள்

## சிசெரா, பாராக்



பாராக் தன்னோடு இருந்த 10,000 ஆட்களைத் தாபோர் மலையிலிருந்து கீழே வழிநடத்திச் சென்று, அவனும் அவனது ஆட்களும் சிசெராவைத் தாக்கி அவன் படையைத் தோற்கடித்தனர். சிசெரா அவனது இரதத்தை விட்டுக் கீழிறங்கி ஓட ஆரம்பித்தான். பாராக் சிசெராவின் படையோடு போரிடுவதைத் தொடர்ந்தான். பாராக்கும் அவனது ஆட்களும் சிசெராவின் படைகளை அரோசேத் வரைக்கும் துரத்திச் சென்று சிசெராவின் ஆட்களை வாளால் கொன்றார்கள். சிசெராவின் ஆட்களில் ஒருவனும் உயிரோடு விடப்படவில்லை.

ஆனால் சிசெரா தப்பி ஓடி யாகேலின் கூடாரத்திற்குள் மறைந்து கொண்டான். சிசெரா சோர்ந்து போய் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கும்போது, யாகேல், கூடார ஆணியைச் சிசெராவின் தலையின் ஒரு பக்கத்தில் வைத்துச் சுத்தியால் ஓங்கி அடித்ததால், சிசெரா மரித்துப் போனான் (நியா. 4ஆம் அதிகாரம்)

## எலியா

கர்மேல் பர்வதத்தில் எல்லோரையும் நடுங்க வைத்த எலியா, யேசபேல் தன்னைக் கொலை செய்யத் திட்டமிட்டு எச்சரிக்கை செய்தபோது, தன் பிராணனை காக்க உயிருக்குப் பயந்து வனாந்தரத்தில் ஒரு சூரைச்செடியின் கீழ் ஒளிந்து கொண்டான். அங்கே உட்கார்ந்து தான் சாக வேண்டும் என்று கோரி, ''போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்'' என்று புலம்பிவிட்டு, படுத்து நித்திரை செய்கிறான். எப்படித்தான் நித்திரை வந்ததோ! கர்த்தர், எலியாவில் கொண்டிருந்த தொலைநோக்கு திட்டங்கள் அதிகம். ஆசகேலை சீரியாவின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ண வேண்டும்; நிம்சியின் குமாரனான யெகூவை இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம் பண்ண வேண்டும். எலியாவோ மனச்சோர்வுக்கு இடமளித்துத் தூங்கினான். கர்த்தர், அவனது சோர்வை அகற்றி, ''நீ போகவேண்டிய தூரம் வெகுதூரம்'' என்று கூறி பெலப்படுத்தி அனுப்பினார் (1இராஜா.19:1-16).



# சுறுசுப்பாக இருந்தவர்கள்

## காலேப்



மோசே, கானான் தேசத்தை வேவுபார்க்க 12 உளவாளிகளை அனுப்பியபோது, காலேப் அதில் ஒருவராகச் சென்றார். மற்ற 10 பேர் பயந்து, அங்கிருப்பவர்கள் ராட்சதர்கள் என்று கூறியபோது, காலேபும் யோசுவாவும் தேசம் மிகவும் நல்லது என்றும், கடவுளின் துணையுடன் அதை வெல்லலாம் என்றும் தைரியமூட்டினர். காலேபின் நம்பிக்கையினால், 40 ஆண்டுகளுக்குப் பிறகு அவர் கானான் தேசத்தில் பிரவேசித்தார். எபிரேயராகிய காலேப் முழுமனதுடன் கடவுளைப் பின்பற்றியவர். யோசுவாவின் தலைமையில் தேசத்தைப் பங்கிட்டபோது, 85 வயதான காலேப், மிகவும் கடினமான எபிரோன் மலைப்பகுதியை (ராட்சதர்கள் வாழ்ந்த இடம்) தனக்குத் தரும்படி கேட்டு, அதைத் தன் விசுவாசத்தால் வென்றார். 85 வயதிலும் காலேப் அசைக்க முடியாத விசுவாசத்துடனும், வாலிபத்தில் இருந்த பெலனுடன் காணப்பட்டார். 40 வயதில் இருந்தது போலவே இன்றும் யுத்தம் செய்யப் பெலன் கொண்டுள்ளேன் என்று தைரியமாகக் கூறினார் (எண். 13-14)

## பவுல்

அப்போஸ்தலனாகிய பவுல், கிறிஸ்துவுக்குப் பின் சுவிசேஷத்தைப் பரப்புவதில் மிகவும் சுறுசுறுப்பாகவும், ஆர்வமாகவும் செயல்பட்ட ஒருமிஷனெரி ஆவார். அவர் பல நாடுகளுக்குப் பயணம் செய்து, சபைகளை நிறுவி, கடிதங்களை எழுதி, கடும் பாடுகளுக்கு மத்தியிலும், கிறிஸ்துவுக்காகக் கடுமையாக உழைத்தார். பவுல் மத்தியதரைக்கடல் பகுதியில் பல நீண்ட மிஷனெரி பயணங்களை மேற்கொண்டு, ஆசியா மைனர் மற்றும் ஐரோப்பாவில் பல சபைகளை நிறுவினார். புதிய ஏற்பாட்டில் உள்ள 13-க்கும் மேற்பட்ட புத்தகங்கள் (கடிதங்கள்) பவுலால் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது.



பவுல் கூடாரம் தைக்கும் தொழிலைச் செய்துகொண்டே, அதை ஒரு சுமையாகக் கருதாமல், சுவிசேஷத்தைப் பரப்பினார். பவுல் எப்போதும் ஜெபத்தில் நிலைத்திருந்து, விசுவாசிகளை உற்சாகப்படுத்துவதில் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தார். நற்செய்தியை அறிவிப்பதிலும் சபைப்பணிகளிலும் சுறுசுறுப்பாக உழைத்தார்.

# ACHIEVERS

(தேர்வு எழுதும் மாணவ, மாணவியர்களுக்கான
சிறப்புப் பிரார்த்தனை)



மாணவர்கள் தேர்வை நல்ல முறையில் எழுதி வெற்றி பெற்று சாதனையாளர்களாய் மாற வேண்டும் என்ற நோக்கத்தோடு, ஒவ்வொரு வருடமும் Achievers என்ற சிறப்பு கூடுகை நடைபெற்று வருகிறது.


இந்த வருடமும் பிப்ரவரி 1ம் தேதி பிற்பகல் 1 மணி மணி முதல் மாலை 4:30 மணிவரை தேவனுடைய கூடாரத்தில் மிகச் சிறப்பாக Achievers கூடுகை நடைபெற்றது. சுமார் 2,500க்கும் அதிகமான மாணவ, மாணவியர்கள் மிகவும் உற்சாகத்தோடு கூடி வந்திருந்தார்கள். பாடல், ஆராதனை வேளையை இயேசு விடுவிக்கிறார் வாலிபர் குழுவினர் நடத்தியபோது வந்திருந்த மாணவ, மாணவியர்கள் உற்சாகத்தோடு தேவனை மகிமைப்படுத்தினார்கள். கடந்த வருடங்களில் நடைபெற்ற Achievers கூட்டங்களில் பங்கு பெற்று தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியர் சாட்சி சொன்னது, வந்திருந்த மாணவர்களை உற்சாகப்படுத்தும் வண்ணமாக அமைந்தது.

இறுதியாகச் சகோதரர் மோகன் சி லாசரஸ் அவர்கள் "பயப்படாதே" என்ற தலைப்பில் தாவீதின் வாழ்க்கையை மையமாக வைத்துத் தேவ செய்தியைப் பகிர்ந்து கொண்டு கூடி வந்திருந்த மாணவர்களின் தேர்வு பயம் நீங்க மற்றும் அவர்களின் ஆசீர்வாதத்திற்காகச் சிறப்புப் பிரார்த்தனை ஏறெடுத்தார்கள். ஜெப வேளையில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்தினால் மாணவர்கள் நிரப்பப்பட்டு தங்களுக்குள் இருந்த பயங்கள் வியாதிகள் கலக்கங்கள் நீங்க ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.









# சிறைகளின் தேவதை

சிறையில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நிலைமைகளை மேம்படுத்துவதில் இவர் மிகவும் பிரபலமானவர். கைதிகளின் கல்வி, தனிப்பட்ட சுகாதாரத்தை மேம்படுத்தியவர் மற்றும் பெண் காவலர்களை நியமிக்க உதவியவர் என்று இவரைக் குறித்து சொல்லிக்கொண்டே போகலாம். இவர் "சிறைகளின் தேவதை" என்று அழைக்கப்படுகிறாள். யார் இந்தத் தேவதை?





இங்கிலாந்து நாட்டில் மிகவும் செல்வந்தர் குடும்பத்தில் பிறந்த எலிசபெத் ஃப்ரை வாலிபப் பருவத்தில் இயேசுவை ஏற்றுக் கொண்டார். நார்விக் பட்டணத்தில் தன்னுடைய ஊழியத்தைத் துவக்கி, முதலில் ஏழை எளியவர்களைச் சந்தித்து அவர்களுக்கு வேதாகமத்தைக் கற்றுக் கொடுத்தும், ஏழைக் குழந்தைகளுக்கு ஞாயிறு பாட சாலைகள் நடத்தியும் வந்தார். திருமணத்திற்கு பின்பு எலிசபெத், எஸ்ஸெக்ஸ் என்னும் நகரில், நோயாளிகளைப் பராமரிக்கவும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் துவங்கினார். கொஞ்ச நாட்களில் அந்த ஊழியத்தில் திடீரென ஒரு திருப்பம் ஏற்பட்டது. 19ம் நூற்றாண்டின் துவக்கத்தில் நியூகேட் என்று அழைக்கப்படும் சிறைச்சாலையில் சீர்கெட்ட நிலமைகள் இருப்பதை அறிந்த எலிசபெத், உடனே செயல்பட ஆரம்பித்தார். நூற்றுக்கும் மேற்பட்ட பெண் கைதிகள் மிகச்சிறிய அறைகளில் எவ்வித சுகாதாரமும் இல்லாமல் அழுக்கிலும், பயங்கரக் குளிரிலும் வாடிக் கொண்டிருப்பதைப் பார்த்த எலிசபெத் நகரத்தின் மேலதிகாரிகளை சந்தித்து அதற்கான காரியங்களில் ஈடுபட்டார். அதுவரை கைதிகளைப் பற்றிய அக்கறை யாருக்குமே இல்லாமல் இருந்தது. நாளடைவில் எலிசபெத்தின் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டு சிறைச்சாலையில் சில மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின. ஒவ்வொரு நாள் காலையிலும், மாலையிலும் ஜெபமும், வேத வாசிப்பும் நடத்தப்பட்டது. தையற் கல்வியும் கற்றுக் கொடுக்கப்பட்டது.

அதுவரை வாழ்க்கையை விரக்தியுடன் கழித்த கைதிகள் தையற் தொழிலில் ஆர்வமுடன் ஈடுபட்டனர்.



அதில் கிடைத்த வருமானம் அவர்களை நேர்மையுடனும், சுய மரியாதையுடனும் இருக்க உதவியது. எலிசபெத் செய்த மற்றுமொரு முக்கிய சீர்திருத்தமும் உண்டு. அந்த நாட்களில் லண்டன் நகரிலிருந்து கைதிகளைக் கப்பலில் ஏற்றி வெகுதூரத்தில் இருக்கும் ஆஸ்திரேலியா நாட்டில் உள்ள சிறைகளுக்குக் கொண்டு போவது வழக்கம். அப்படி நீண்ட கடல் பயணத்தின்போது கூடப் பெண் கைதிகளின் விலங்குகளைக் கழற்றாமல், நோயுற்றோருக்கு எந்தவித மருத்துவ சிகிச்சையும் அழிக்காமல், ஆஸ்திரேலியாவிற்கு கொண்டு சென்ற பின்பும்  கைதிகள் அடிமைகளாகவே வாழ்ந்தனர் என்பதை அறிந்த எலிசபெத் அரசாங்க அதிகாரிகளிடம் முறையிட்டார். அவருடைய விடாமுயற்சியினால், இப்படிப்பட்ட  கொடுமைகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தடுத்து நிறுத்தப்பட்டன.

நியூகேட்டில் ஆரம்பித்த சிறை சீர்திருத்தங்கள் விரைவில் நாட்டில் உள்ள மற்ற சிறைச்சாலைகளிலும் வலியுறுத்தப்பட்டன. ஒவ்வொரு தடவையும் கைதிக் கப்பல்கள் இங்கிலாந்திலிருந்து புறப்படும்போது, எலிசபெத் அங்குச் சென்று வருகின்ற எல்லாருக்கும் ஆளுக்கு ஒரு வேதாகமமும்,  கம்பளி உடைகள் பின்னுவதற்கு வேண்டிய நூல்களையும், ஊசிகளையும் கொடுத்து அன்புடன் வழியனுப்பி வைத்து விட்டு வருவார். இப்படி ஒன்றிரண்டு வருடங்கள் அல்ல, 25 வருடங்களாக ஊழியம் செய்தார்.

1813 ஆம் ஆண்டில் முதன்முதலில் நியூகேட் சிறைச்சாலைக்குச் சென்றபோது, பெண் கைதிகள் மற்றும் அவர்கள் குழந்தைகளின் மோசமான நிலமையைக் கண்டு மன பாரமடைந்தார். எனவே, அவர்களுக்கு உடைகள் மற்றும் உணவை வழங்கினார். சிறைச்சாலையின் உள்ளே அவர்களுக்காக ஒரு தேவாலயத்தையும், அவர்களின் குழந்தைகளுக்காக ஒரு பள்ளியையும் ஏற்படுத்தினார். அதுமட்டுமல்லாமல், தையல், பின்னல் போன்ற சுய வேலைவாய்ப்பு திறன்களையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். எல்லாவற்றிற்கும் மேலாக, ஆத்தும மீட்படைய கர்த்தருடைய வார்த்தையின் சத்தியங்களை அவர்களுக்குக் கற்பித்தார். எலிசபெத் காட்டிய கிறிஸ்துவின் அன்பு மற்றும் ஜீவனுள்ள தேவ வார்த்தையால் தொடப்பட்ட பல கைதிகள் மனந்திரும்பி கர்த்தரிடம் திரும்பினர்.

ஒருமுறை குளிர்கால பனியில் தெருவில் கிடந்த ஒரு சிறுவனின் உடலைப் பார்த்த எலிசபெத், வீடற்றவர்களுக்கு இரவில் தங்க, சத்திரங்கள் அமைத்துக்கொடுத்தார். அவரது சேவைகளினால் ஈர்க்கப்பட்ட விக்டோரியா மகாராணி அவரது பணிக்கு ஆதரவாக நன்கொடைகளை வழங்கினார். அவர் முன்மொழிந்து நடைமுறைப்படுத்திய சிறை சீர்திருத்தக் கொள்கைகள் பிற ஐரோப்பிய நாடுகளிலும் பின்பற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளன. அவரது சேவை பிற்கால மிஷனரிகளை ஈர்த்தது. மேலும் அவர்கள் சுவிசேஷத்தை பிரசங்கிப்பது மட்டுமல்லாமல், சமூக சேவையும் செய்வதற்கு ஊக்கமளித்தது. பெண்கள் அதிகமாக வெளியே செல்வதை சமுதாயம் விரும்பாத காலக்கட்டத்தில் எலிசபெத் ஃப்ரை துணிச்சலுடன் செயல்பட காரணம், கர்த்தர் மீது அவர் வைத்த அளவற்ற அன்பும், பயனுள்ள சேவையைச் செய்ய வேண்டும் என்ற உறுதியும் தான்.

**அன்பான வாலிபர்களே!** எந்த ஊழியம் என்பது முக்கியமல்ல! எப்படி ஆத்துமாக்களை அறுவடை செய்கிறோம் என்பது தான் முக்கியம். சிறை ஊழியம் செய்து அநேக ஆத்துமாக்களை ஆதாயம் செய்த எலிசபெத் போல நாமும் சிறையில் இருக்கும் ஆத்துமாக்களை தேடி செல்ல ஆயத்தப்படுவோம்.

# தூரப்பார்வை!!

சாதனை சுமா கிரேஷன்

**அன்பான இளம் சாதனையாளர்களுக்கு, என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்!! வெற்றி என்பது நாம் முயற்சித்து அடுத்த நிமிடத்திலேயே கிடைப்பதில்லை, அதற்காக உழைக்க வேண்டும், கவனம் செலுத்த வேண்டும், மிக முக்கியமாகத் தோல்வியுடன் கடினமாகப் போராட வேண்டும். இதையெல்லாம் செய்தால் மட்டுமே வெற்றி என்னும் இலக்கை மிகத் துல்லியமாக அடைய முடியும். அப்படி போராடி தன் இலக்கை அடைந்த சாதனையாளரின் வாழ்க்கை உங்கள் வெற்றிக்காக...**

Peyush Bansal (பேயூஷ் பன்சால்) 1985ஆம் ஆண்டு நியூ டெல்லியில் பிறந்தார். தனது பள்ளிப் படிப்பை முடித்துத் தன் உயர் கல்விக்காகக் கனடாவில் McGill என்ற யூனிவர்சிட்டியில் எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங் படித்தார். படிப்பு முடிந்தவுடன் அமெரிக்காவில் உள்ள Microsoft நிறுவனத்தில் பணியாற்றினார். உயரிய வேலை கைநிறைய சம்பளம் இருந்தாலும் இவருக்குச் சந்தோஷம் இல்லை. இவருடைய இலக்கு சொந்தத்தொழில் தொடங்குவதுதான். பலமுறை யோசித்த பிறகு தன் வேலையை விட்டுவிட்டு இந்தியாவிற்கு திரும்பினார். பலர் இவர் முடிவை எதிர்த்தனர். ஆனால் இவர் அதையெல்லாம் கண்டுகொள்ளாமல், தன் இலக்கை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்தார்.

இந்தியாவிற்கு வந்த பேயூஷ் SearchMycampus, Flyrr Watchkart போன்ற பல தொழில்களில் முயற்சி செய்து தோல்வியடைந்தார். இவர் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியவில்லை.

தோல்வியுடன் போராடி 2010ஆம் ஆண்டு Lenskart என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். இந்தியாவில் உள்ள மக்களுக்குக் கண் பராமரிப்பு மிகவும் எளிதாகவும் மலிவாகவும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தை முன்னிறுத்தி தொடர்ந்து உழைத்தார். அந்தக் காலத்தில் மக்கள் ஆன்லைனில் கண்ணாடி வாங்கத் தயங்கினார்கள். இதையறிந்து கொண்ட பேயூஷ் Try at Home, Home Eye Check-up போன்ற புதிய சேவைகளை அறிமுகப்படுத்தினார். இதனால் பேயூஷ் அதிக வாடிக்கையாளர்களைத் தன் பக்கம் இழுத்தார். படிப்படியாக முன்னேறத் தொடங்கினார். இன்றைக்கு Lenskart இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கான கடைகள் கொண்ட ஒரு பெரிய நிறுவனமாக வளர்ந்துள்ளது. இவரால் பலர் பயன் பெற்றுள்ளனர்.



இதை வாசிக்கும் நண்பர்களே, பேயூஷ் தன் இலக்கைத் தீர்மானித்த அடுத்த நாளிலோ அல்லது அடுத்த வருடத்திலோ அதை அடையவில்லை. அதற்காக எடுத்த முயற்சிகள் தோல்வி அடைந்தாலும், தொடர்ந்து போராடி முடிவில் தன் இலக்கை அடைந்துள்ளார். அதுபோலவே நீங்கள் தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்! அதற்காக அதிகமாக உழையுங்கள்! உங்கள் முயற்சி ஒரு நாளும் தோற்றுப் போகாது, வெற்றி ஒரு நாளில் வராது; ஆனால் முயற்சியைக் கைவிடாதவரை, அது தவறாமல் வந்து சேரும்!



# என்ன படிக்கலாம்?

தகவல்: ஆனி

10-ம் வகுப்புக்குப் பிறகு மேல்நிலை வகுப்பில் (11, 12) என்ன குரூப் எடுத்தால் கல்லூரியில் என்ன படிக்கலாம் என்பதை பார்க்கலாம்.

### 11ஆம் வகுப்பில் எடுக்க வேண்டிய பாட பிரிவுகள்:

**அறிவியல் (Science Group -Bio-Maths/Pure Science):** மருத்துவம், செவிலியர், பிசியோதெரபி, விவசாயம், உயிரித் தொழில்நுட்பம், பொறியியல் ஆகிய துறைகளுக்கு ஏற்றது.

**கணினி அறிவியல் குழு (Computer Science/Maths):** பொறியியல் **(BE/BTech), IT,** கணினிப் பயன்பாடுகள் **(BCA),** தரவு அறிவியல் **(Data Science),** செயற்கை நுண்ணறிவு **(AI)**

**வணிகவியல் (Commerce Group):** Commerce & Accountancy: CA, CS, B.Com, வங்கி மேலாண்மை, வணிக நிர்வாகம் (BBA), சந்தைப்படுத்துதல் (Marketing).

**கலை மற்றும் மனிதநேயம் (Arts/Humanities):** வரலாறு, புவியியல், பொருளாதாரம், அரசியல் அறிவியல்: சட்டம் (Law), பத்திரிக்கையியல் (Journalism), உளவியல் (Psychology), ஆசிரியர் பயிற்சி.

**தொழில்நுட்பக் கல்வி (Vocational Group):** பொறியியல், தொழில்நுட்பம், ஹோட்டல் மேனேஜ்மென்ட், கணினி சார்ந்த வேலைவாய்ப்புகள்.

### 10-ம் வகுப்புக்குப் பின் டிப்ளமோ படிப்புகள் (Diploma Courses) படிக்க விரும்பினால்:

- Diploma in Engineering (Mechanical, Civil, Electrical, Computer).
- Diploma in Hotel Management & Catering.
- Diploma in Fashion Designing.
- Diploma in Fine Arts or Graphic Design.



### 10-ம் வகுப்புக்குப் பின் ITI படிப்புகள் (ITI Trades):

- **Electrician, Fitter, Mechanic, Welder, Computer Operator (COPA).**

தங்கள் ஆர்வம், திறமை மற்றும் எதிர்கால இலக்கைப் பொறுத்து சரியான பிரிவைத் தேர்ந்தெடுத்து படித்தால் மட்டுமே உங்கள் இலக்கை அடைய முடியும்.




ஜெபம் : பெனிட்டா

Jebikalam Vanga

# ஜெபிக்கலாம் வாங்க!!

## ஜெபக் கையேடு மார்ச் 2026



தமிழ்நாட்டில் மார்ச் 2026-ல் நடைபெறவுள்ள 10-ஆம் வகுப்புத் தேர்வில் சுமார் 8.70 இலட்சம் மாணவ, மாணவிகளும், 12-ஆம் வகுப்புத் தேர்வில் சுமார் 8.7 இலட்சம் மாணவ, மாணவிகளும் என மொத்தம் 16 இலட்சத்திற்கும் அதிகமான மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதவிருக்கிறார்கள். 12-ஆம் வகுப்புத் தேர்வு மார்ச் 2-ஆம் தேதியும், 10-ஆம் வகுப்புத் தேர்வு மார்ச் 11-ஆம் தேதியும் ஆரம்பிக்கவிருக்கிறது. மாணவ, மாணவிகள் நல்ல முறையில் தேர்வு எழுதவும் நல்ல மதிப்பெண்கள் பெறவும் ஜெபிப்போம்.



போர் காரணமாக உயிரிழந்திருக்கும் போர் வீரர்கள், சாமானிய மக்கள் மற்றும் போர் காரணமாகப் பஞ்சம், வேலையின்மை போன்ற அடிப்படை தேவைகளைக் கூடச் சந்திக்க முடியாத போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் நெருக்கத்திலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.



உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் கடந்த 2023ம் வருடம் பிப்ரவரி 24-ஆம் தேதி தொடங்கி 3 வருடமாகியுள்ளதால், ரஷ்யப்படைகள் படிப்படியாக உக்ரைனின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றி வருகிற நிலையில், இருதரப்பிலும் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையிலும் எந்த முன்னேற்றமும் எட்டப்படாததின் விளைவாக, போர் தொடர்ந்து நடைபெறுவதின் காரணமாக, இதுவரை 32,950 ரஷ்ய வீரர்கள் பலியாகியுள்ளார்கள். இப்போர் விரைவில் முடிவுக்கு வர ஜெபிப்போம்.



கடந்த ஓராண்டில் மட்டும் சுமார் 4.5 லட்சம் புதிய வீரர்கள் ரஷ்யா ராணுவத்தில் சேர்ந்துள்ளனர். உக்ரைனுக்கு எதிராகத் தற்போது 7 லட்சம் ரஷ்ய இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். போர் நிறுத்தப்படும்படி ஜெபிப்போம்.



உலகில் ஒவ்வொரு நாளும் 13 கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் 4,848 கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். உலகில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் நிறுத்தப்பட ஜெபிப்போம்.



கடந்த 2021ம் ஆண்டு முதல் 2025ம் ஆண்டு டிசம்பர் மாதம்வரை சுமார் 65 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இது சராசரியாக மாதத்திற்கு ஒரு மாணவர் உயிரிழக்கும் அபாயகரமான நிலையைக் காட்டுகிறது. இந்தியாவின் உயர்கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்கள் மன அழுத்தம் காரணமாகத் தற்கொலை செய்து கொள்வது அதிகரித்து வருவது தடுத்து நிறுத்தப்பட ஜெபிப்போம்.



பாதுகாப்பு படையினர், நக்சலைட்டுகளிடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் 15 நக்சலைட்டுகள் கொல்லப்பட்டனர். நக்சலைட்டுகளுக்கு எதிராகப் பாதுகாப்பு படையினர் நடத்திய தேடுதல் வேட்டையில் 15 பேர் கொல்லப்பட்டனர். இது போன்ற தாக்குதல்களிலிருந்து நம் பாதுகாப்பு படையினர் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.




இந்தியாவில் ஊழல் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளில் மகாராஷ்டிரா மாநிலத்தில் மட்டும் சுமார் 22.9 சதவீதம் வழக்குக்கள் பதிவாகியுள்ள நிலையில், வங்கியின் நிதி மோசடியிலும் முதலிடத்தை மகாராஷ்டிரா மாநிலமே பிடித்துள்ளது. நாட்டிலேயே ஊழல் மற்றும் வங்கி மோசடிகளின் தலையிடமாக இருக்கும் மகாராஷ்டிரா மாநிலத்திற்காகவும், மகாராஷ்டிராவைத் தொடர்ந்து டெல்லி, தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் அடுத்த இரண்டு இடத்தைப் பிடித்துள்ள அவல நிலைமைகளுக்காகப் போராடி ஜெபிப்போம்.

தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலில் வாக்களிக்கவிருக்கும் சுமார் 6 கோடியே 36 இலட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்களும் தவறான வாக்குறுதிகளை நம்பி ஓட்டளிக்காமல், சரியான நபரைத் தேர்ந்தெடுத்து ஓட்டளிக்கவும் தேர்தல் ஆணையம் நடுநிலைமையோடு செயல்படவும் ஜெபிப்போம்.







ஜெபக் கையேடு

# Soul Detox

தகவல் : ஜோயல்

Hello friends! Soul Detox மூலம் மறுபடியும் உங்களை சந்திக்கிறது சந்தோஷம்! இந்தக் கடைசி காலங்களில் நம் ஆத்துமாவையும், உடல்நலத்தையும், மனநலத்தையும் பாதிக்கிற ஒரு முக்கியமான காரியத்திலிருந்து நம்ம soulஅ எப்படி detox பண்ணலாம்னு இந்த மாதம் பார்க்கப்போகிறோம்!



## Social Media Detox!

1. காலையில் தூக்கத்திலிருந்து எழும்போதே ''இன்னைக்கு என்ன **Updates and Notifications** வந்திருக்கு?! யாரு நமக்கு **Text** பண்ணிருக்காங்க?!''-னு **mobile**-அ தேடுறீங்களா??

2. **Night**- ல தூங்காம **Reels, Shorts**னு **scroll** பண்ணிகிட்டே இருக்கீங்களா?!

3. **Messages, notifications** வந்திருக்குமோ என்று அடிக்கடி **check** பண்றீங்களா?

இந்த மூன்றில் ஒன்றை செய்பவர்களாய் இருந்தாலும், நீங்க **Danger Zone** ல இருக்கீங்க! உங்களுக்கு இந்த மொபைல் ஃபோன் அடிமைத்தனம் என்னும் நோயிலிருந்து ஒரு **Detox** தேவை!

## பாதிப்புகள்

1. அதிக நேரம் **Mobile screen**ஐ பார்ப்பது தூக்க சுழற்சிகளைச் சீர்குலைக்கிறது.

2. நாம் தூங்கும்போதும் மூளையை **active** ஆக வைப்பதால், மூளை அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இதனால் கவன சிதறல்கள், ஞாபக மறதி என்று பல அடிப்படை மனநல பாதிப்புகளையும் ஏற்படுத்துகிறதினால் ஒரு நாளே வீணாகிவிடும்.

3. தேவையற்ற நபர்களோடு **connect** ஆவதாலும் பாவம் செய்யத் தூண்டப்படுகிறோம், பிசாசின் மாய வலைகளிலும் பலநேரங்களில் சிக்கிக்கொள்கிறோம். இது பல சூழ்நிலைகளில் மன அழுத்தத்தில் நம்மைத் தள்ளிவிடுகிறது. இது தான் **FOMO** என்று கூறப்படுகிறது.

4. முக்கியமாக, தேவையற்ற பல காரியங்களைத் தேவையற்ற நேரங்களில் பார்ப்பதால் மற்றவர்களோடு நம்மையும் நம் நிலையையும் **COMPARE** செய்யத் தூண்டும்.

5. **Snapchat-ல் streaks maintain** பண்ணுவதே இந்த நாட்களில் ஒரு வீண் பெருமையாகிவிட்டது.

## பயன்கள்

- மருத்துவ ரீதியாக, குறைக்கப்பட்ட திரை நேரம் பதட்டத்தையும் மன அழுத்தத்தையும் குறைக்கிறது.
- சிறந்த கவனம் மற்றும் தெளிவு - கவனம் செலுத்தும் நேரத்தையும் முடிவெடுக்கும் திறனையும் மேம்படுத்தும்.
- ஆரோக்கியமான சுயமரியாதை - குறைவான ஒப்பீடு வலுவான சுய மதிப்புக்கு வழிவகுக்கிறது.
- ஆரோக்கியமான தூக்கம், காலையில் நல்ல சுறுசுறுப்பு.

படுக்கைக்கு முன் திரை பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவது தூக்கத்தின் தரம் மற்றும் மனநிலையை மேம்படுத்துகிறது.

- Dopamine Spikes குறையும். இது உணர்வுகளை நிலைப்படுத்த உதவுகின்றன.
- உண்மையான உறவுகள் - Offline presence உண்மையான தொடர்புகளைப் பலப்படுத்துகிறது.
- ஆண்டவருடைய சத்தத்தைத் தெளிவாகக் கேட்க முடியும்.

"தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்." (யாக்கோபு 4:8)

**இதைச் சரியாகச் செய்தாலே நம் வாழ்க்கையில் சந்திக்கும் பல பிரச்சனைகளுக்கு முடிவும், வழிநடத்துதலும் கிடைத்துவிடும்.**

## Social Media Detox செய்வது எப்படி?

**லூக்கா 5:16 - இயேசுவோ, வனாந்தரத்தில் தனித்துப் போய், ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார். சமூக வலைத்தளங்களிலிருந்து தனிமை படுத்திக்கொள்வது என்பது "உலக இணைப்பைத் துண்டித்து, தேவனோடு இணைவது" ஆகும்.**

1. **Snapchat, Instagram, Facebook, Whatsapp** போன்ற செயலிகளை ஒரு வாரத்திற்கோ, ஒரு மாதத்திற்கோ **Uninstall** செய்யலாம். அல்லது ஒரு நாளைக்கு 35-45 நிமிடங்கள் மட்டும் பயன்படுத்தலாம்.
2. சமூக வலைத்தளங்களில் பயன்படுத்திய நேரங்களைப் பைபிள் படித்துத் தியானிக்கவும், ஜெபிக்கவும், ஆவிக்குரிய புத்தகங்களைப் படிப்பதற்கும், ஆவிக்குரிய பாடல்களைக் கேட்பதற்கும் பயன்படுத்தலாம்.
3. உங்கள் பெற்றோரோடு நேரம் செலவிடுங்கள். அவர்களோடு நாம் இருந்தாலும், "எப்படி இருக்கீங்க?" என்று நலம் விசாரிப்பதும், உதவுவதும் அவர்களுக்கும் சந்தோஷத்தைத் தரும், நமக்கும் மன அமைதியை தரும்.
4. படுக்கைக்குப் போவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக போன்-ஐ **Bedtime Mode**-ல் போட்டு வேறு அறையில் வைத்து விடுங்கள்.
5. **Walking, Jogging** அல்லது உடற்பயிற்சி செய்வதற்கு நேரத்தைச் செலவிடுங்கள்.
6. ஒவ்வொரு நாளும் **Settings → Digital Wellbeing**-ல் உங்கள் **Screen time**- ஐ **check** செய்து, நாளை இதைவிடக் குறைவான நேரம் பயன்படுத்துவேன் என்று தீர்மானித்து முயலுங்கள்.



**இந்த Detox முறைகளைப் பின்பற்றிப் பார்த்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!
உலக நட்புகளைத் துண்டித்து, தேவனோடு உள்ள நட்பைச் சீர்படுத்துவோம்!**

# Revival IGNITERS

## Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில்
அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி
ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று
பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த
ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

### *EVERY 1st SUNDAY (1st MAR)*

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre, Ajantha Mahal,
# 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9750955548 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre, Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

### *EVERY 2nd SUNDAY (8th MAR)*

**BANGALORE (3PM-5PM)**
World Revival Prayer Centre, 57/2 Thomasappa layout (Opp) Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya (Nagavara)
9791444788 | 080 35 45 45

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

**MULUND (5PM - 7:30PM)**
Shekinah NLA Church, Vijay Nagar, Near Vani Vidyalaya School, Mulund-West
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School (Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street, North side of TPV Mill, Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre, #203, Madurai Road, Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM)**
Reheboth Church,
Near old bus stand,
9710809626 |9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar,
1st street, Salem Road,
Namakkal-637001
9962085523 | 94886 18305

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto,
1st floor, 163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

## *EVERY 3rd SATURDAY (21ST MAR)*

**MYSORE (3:30PM - 6PM)**
World Revival Prayer Center,
3818, 14th Cross,
St. Mary's Road,
FTS Circle, N.R. Mohalla.
9962085523 | 9886311777

## *EVERY 3rd SUNDAY (15th MAR)*

**SALEM (3PM - 6PM)**
Karunya Prayer Hall,
76/67, Near Thinathanthi office,
opp. Gandhi Stadium, Arisipalayam
9962085523

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex,
#43/R4, Rajendra Nagar,
Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor,
Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing,
Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9750955548

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road,
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9750955548

**PONDICHERRY (5PM TO 7PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9962085523

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

**DELHI (3 PM TO 5 PM)**
World Revival Prayer Centre,
Plot 152, Pratap Nagar
Near Hari Nagar bus depot
New Delhi - 110064
7217663240

## *EVERY 4th SUNDAY (22nd MAR)*

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar, Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor,
305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**THISAYANVILAI (2:30PM - 5:30PM)**
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845 | 9750955548

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur
Byepass Road, Madurai
9750955548

**உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**

# மகளிர் தினம்

பெண்கள் இன்று உலகின் அனைத்து துறைகளிலும் சாதனை படைத்து, புதிய முன்னுதாரணங்களை உருவாக்கி வருகின்றனர். முன்னணி நிறுவனங்களின் தலைவர்களாகவும், விளையாட்டு துறைகளில் சாதித்தவர்களாகவும், புதிய முயற்சிகளை வெற்றிகரமாகத் தொடங்குபவர்களாகவும் திகழ்கின்றனர். தங்கள் கடின உழைப்பால் வெற்றி கண்ட பெண்களின் சாதனைகள் உங்களை ஊக்குவிக்க...



## மலாலா யூசுப்சாய்

11 வயதில் தலிபான் ஆட்சியின் கீழ் பெண்கல்விக்காகக் குரல் கொடுத்தார் மற்றும் பிபிசி உருது வலைப்பதிவில் (குல் மக்காய் என்ற பெயரில்) எழுதினார். தலிபான்களின் தடைகளை மீறிப் பெண் கல்விக்காகப் போராடியவர், பள்ளிக்குச் சென்றபோது தலிபான் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிர் பிழைத்தார். தற்போது, மலாலா நிதி (Malala Fund) மூலம் உலகளவில் பெண் கல்விக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார். பாகிஸ்தானைச் சேர்ந்த பெண்கல்வி ஆர்வலர் மற்றும் உலகின் மிக இளம் வயதில் நோபல் அமைதிப் பரிசைப் பெற்றவர்.

## மிதாலி ராஜ் (மகளிர் சர்வதேச கிரிக்கெட்)



மகளிர் சர்வதேச கிரிக்கெட் ஒருநாள் போட்டிகளில் 10,868 ரன்களை கடந்த முதல் வீராங்கனை, தொடர்ச்சியாக 7 அரைசதங்கள் அடித்த முதல் வீராங்கனை, மேலும் இரண்டு ICC உலகக் கோப்பை இறுதிப் போட்டிகளுக்கு இந்திய அணியை வழிநடத்திய முதல் மற்றும் ஒரே கேப்டன் (ஆண்/பெண் என இரு பிரிவிலும்). T20I-களில் 2000 ரன்களை கடந்த முதல் இந்திய வீராங்கனை. அர்ஜுனா விருது (2003) மற்றும் பத்ம ஸ்ரீ (2015) விருதைப் பெற்றார். தனது 23 ஆண்டுகால சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையில், இந்திய மகளிர் கிரிக்கெட்டின் முகமாக, பல சாதனைகளைப் படைத்து ஒரு புதிய தரத்தை நிலைநாட்டினார்.



## முனைவர் டெஸ்ஸி தாமஸ்

இந்தியாவில் ஏவுகணை திட்டப்பணி ஒன்றிற்கு தலைமை தாங்கும் முதல் பெண் அறிவியலாளர் என்ற பெருமை கொண்டவர். இந்தியாவின் "ஏவுகணைப் பெண்மணி" (Missile Woman of India) என்று அழைக்கப்படுபவர். அவர் இந்தியாவின் முக்கிய ஏவுகணைகளில் ஒன்றான அக்னி ஏவுகணைத் திட்டத்தின் திட்ட இயக்குநராகப் பணியாற்றியுள்ளார் மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பில் (DRDO) ஒரு முக்கியப் பங்காற்றியுள்ளார்.

## டாக்டர் பிரியா ராமச்சந்திரன்



புற்று நோயால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய குழந்தைகளுக்கு ரே ஆஃப் லைட் ஃபவுண்டேஷன் மூலம் இலவச சிகிச்சை அளித்து 15 ஆண்டுகளாகத் தொடர்ந்து சேவை செய்து வருகிறார். சென்னை மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் பயின்று, இங்கிலாந்தில் அறுவை சிகிச்சையில் பட்டம் பெற்றவர். இதுவரை புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 140 க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு இலவச சிகிச்சை அளித்துள்ளார்.

ஒரு சிகிச்சைக்கு 10 லட்சம்வரை செலவாகும் நிலையில் ஏழைக் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றி அவர்களுக்குப் புதிய வாழ்க்கையை பரிசாக அளித்துக் கொண்டிருக்கிறார். இன்றைய சூழலில் மருத்துவராக மட்டும் தன் பணியை முடித்துக் கொள்ளாமல் தன்னுடைய ஃபவுண்டேஷன் மூலம் எத்தனையோ குழந்தைகளின் வாழ்வை ஒளிர செய்கிறார் இந்த அன்புள்ளம் படைத்த சமூக சேவகி. மருத்துவராகவும், சமூக சேவகராகவும் பல பெண்களுக்கு உத்வேகம் அளிக்கிறார் பிரியா ராமச்சந்திரன்

புதிர் : ரெபேக்கா

# வேதாகம புதையல் வேட்டை

கீழே 'ள்' என்ற வார்த்தை கொடுக்கப்பட்டுள்ளது. வேதாகமத்தில் 30 'ள்' என்று முடியும் 30 பெண்களின் பெயர்களை இந்தக் கட்டத்தில் நிரப்பி, அந்த நபர் யார் என்பதை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.பெயர்களை, வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.




கடந்த மாத வெற்றியாளர்
ப்ரீத்தி, சேலம்.
அவர்களை வாழ்த்துகிறோம்.

## கடந்த மாத விடைகள்

தேவன் அன்பாகவே இருக்கிறார்

அன்பு ஒருபோதும் ஒழியாது

அன்பு திரளான பாவங்களை மூடும்

அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது

நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்

**சரியான விடையனுப்பும் ஒரு நபருக்கு பரிசு உண்டு**

பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் **15.03.2026**

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org



# வேதாகம களஞ்சியம்

வேத ஆராய்ச்சி : ஜெபமல்

Hello Friends! சென்ற மாதம், ஆதியாகமத்தின் பின்னணியை குறித்து அறிந்துகொண்டோம். உங்க Bible Reading Journey-க்கு உபயோகமா இருந்திருக்குமென்று விசுவாசிக்கிறோம். இந்த மாதத்திலும் அடுத்த நான்கு ஆகமங்களின் பின்னணியை அறிந்துகொள்ள நீங்க ready-யா?

**யாத்திராகமம்** – தேவன் தமது ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து இரட்சிக்கிறார்.

**லேவியராகமம்** – ஆராதிக்கவும், பரிசுத்தமாய் வாழவும் தேவன் தமது ஜனங்களுக்குக் கற்று தந்த வழிமுறைகள்.

**எண்ணாகமம்** – வனாந்திர பாடுகள்.

**உபாகமம்** – மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கானானை சுந்தந்தரிப்பதற்கு முன்னிருந்த தங்கள் நிலைமையை நினைப்பூட்டுகிறார்.

### அடிமைத்தனமும், இரட்சிப்பும் (யாத். 1–14)

இஸ்ரவேலர்களின் 400 வருட அடிமைத்தனம் - தேவன் மோசே என்னும் இரட்சகனை எழுப்புகிறார் - வாதைகளும், பார்வோனின் மனக்கடினமும் - செங்கடல் இராண்டாய் பிரிந்தது.

### நியாயப்பிரமானமும் உடன்படிக்கையும் (யாத். 19–20)

10 கட்டளைகள் - தேவன், இவைகளை கடைப்பிடித்தால் நான் உங்களை நேசிப்பேன் என்று சொல்லவில்லை. மாறாக, நான் உங்களை இரட்சித்தபடியால் இவைகளை கடைபிடிக்க வேண்டும் என்று நமக்குக் கட்டளைக்கொடுக்கிறார்.

### ஆராதனையும் பரிசுத்தமும் (லேவியராகமம்)

லேவியராகமம் வாசிப்பதற்கு சற்று கடினமாக இருந்தாலும், அதன் கருத்து எளிதானது தான்.

1. நாம் ஆராதிக்கிற தேவன் பரிசுத்தர். அவர் தமது ஜனங்களுக்கு மத்தியில் வாசம்பண்ண விரும்புகிறார்.
2. பாவத்தின் விளைவுகள், பாவ மன்னிப்பின் முக்கியத்துவம். (லேவி. 1-7)
3. 'பலிகள்' பாவத்தினால் உடைந்துபோன ஜனங்கள் பரிசுத்தமுள்ள தேவனை அணுகுவதற்கான வழியை உண்டாக்கினது. ஒவ்வொரு பலியும் இஸ்ரவேல் ஜனங்களுக்குப் பாவத்தின் விளைவுகளையும், கிருபையின் அவசியத்தையும், பாவமன்னிப்பு சாத்தியம் என்பதையும் நினைப்பூட்டினது.

### வனாந்திரத்தின் பாடுகள் (எண்ணாகமம்)

இஸ்ரவேலர்கள் தங்களை இரட்சித்த தேவனை விசுவாசியாமல், அவருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள், கலகஞ்செய்தார்கள், எதிரிகளுக்குப் பயந்தார்கள். இதன் விளைவாய், 14 நாட்களில் **(320 kms approx.)** அடைய வேண்டிய வாக்குத்தத்த பூமியை 40 வருடங்களாக வனாந்திரத்தில் அலைந்து திரிந்து அடைந்தார்கள்.

### நாம் யார் என்பதை நினைவில்கொள்ள வேண்டும் (உபாகமம்)

மோசே, கானானுக்குள் நுழையும் முன்னே ஜனங்களுக்கு நினைப்பூட்டின மூன்று முக்கியமான காரியங்கள். எந்தச் சூழ்நிலையிலும்,

1. தேவனை மறக்கக் கூடாது
2. தேவனை விட்டு விலகிவிடக் கூடாது
3. ஜீவனையும், பரிசுத்தத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

### நினைவிற்கு:

**1. தேவன் அநீதியைப் பார்த்து, தக்க பதிலளிப்பார்.**

**2. இரட்சிப்பை கிருபையால் இலவசமாய் பெற்றுக்கொள்கிறோம். ஆனால் அந்த இரட்சிப்பில் பூரணமடைவதென்பது ஒரு நாள் அனுபவமல்ல.**

**3. கட்டளைகள் கட்டுபாட்டுக்குரியவைகள் அல்ல, நம் பாதுகாப்பிற்காகவே.**

**4. தேவனுக்கு விரோதமான முறுமுறுப்பும், சந்தேகமும் நம்மை வனாந்தரமான சூழ்நிலைகளில் நிலைக்கப் பண்ணிவிடும்.**

**5. நம் நிலையை உணர்ந்து தேவனுக்கு முன் நம்மைத் தாழ்த்த வேண்டும்.**

**6. இஸ்ரவேலர்களை போல இரட்சிப்பை விரும்பி, உருவாக்கப்படுதலை வெறுத்தால் பரலோகம் செல்ல முடியாது.**

# இயேசு விடுவிக்கிறார்
# வாலிபர் ஊழியத்தின் மூலமாக...

■ பள்ளி, கல்லூரி கூடுகைகள் ■ வாலிபர் எழுப்புதல் கூடுகைகள் ■ Achievers கூடுகைகள் ■ மாதந்தோறும் Revival Igniters Live நிகழ்ச்சி Tamil, Hindi மற்றும் Kannada மொழிகளில் வெளிவருகிறது. ■ வாலிபர் உலகம் என்ற மாதாந்திர பத்திரிக்கை Tamil, English, Malayalam, Hindi மொழிகளில் அச்சிடப்பட்டுவருகிறது.




இதன் விளைவாக ஒவ்வொரு வருடமும் இலட்சக்கணக்கான வாலிபர்களைச் சந்தித்து வருகிறோம். இதற்கென்று ஒவ்வொரு மாதமும் இலட்சக்கணக்கான பணம் செலவு செய்யப்படுகிறது. நீங்கள் வாலிபர் ஊழியத்தோடு இணைந்து ஜெபிக்க, கொடுக்க, உழைக்க அன்புடன் அழைக்கிறோம். நீங்களும் எங்களோடுகைகோர்த்தால் இன்னும் துரிதமாகக் கோடிக்கணக்கான வாலிபர்களுக்குத் தங்குதடையின்றி சுவிசேஷம் அறிவிக்கலாம்.

# செய்திகள்!

## டெல்லியில் 800க்கும் மேற்பட்டவர்கள் மாயமான விவகாரம் :

## விளக்கம் கேட்டுத் தேசிய மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ்!




டெல்லியில் கடந்த மாதம் 800க்கும் மேற்பட்டவர்கள் மாயமான விவகாரம் தொடர்பாகத் தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து வழக்குப்பதிவு செய்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக 2 வாரங்களில் விரிவான அறிக்கையைத் தாக்கல் செய்ய டெல்லி அரசுக்கு உத்தரவிட்டது. டெல்லியில் ஜனவரி மாத முதல் 2 வாரங்களில் 807 பேர் மாயமானதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக ஊடகங்களில் வெளியாகி உள்ள செய்திகளின் அடிப்படையில், தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து வழக்குப்பதிவு செய்துள்ளது.

டெல்லியில் மாயமான 807 பேரில் 191 சிறார்கள் மற்றும் 616 பெரியவர்கள் உள்ளதாகவும் இவர்களில் தற்போது வரை 235 பேரைக் காவல்துறையினர் கண்டு பிடித்துள்ளதாகவும் தெரிவித்துள்ள மனித உரிமைகள் ஆணையம், எஞ்சிய 572 பேர் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது. ஊடகங்களில் வெளியான செய்தி அறிக்கையின் உள்ளடக்கங்கள் உண்மையாக இருந்தால், அவை மனித உரிமைகள் மீறல் தொடர்பான தீவிரமான சிக்கல்களை எழுப்புவதாக மனித உரிமைகள் ஆணையம் கருதுவதாகத் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த விவகாரம் தொடர்பாக 2 வாரங்களுக்குள் விரிவான அறிக்கை அளிக்க டெல்லி மாநகர தலைமை செயலாளர் மற்றும் டெல்லி காவல் ஆணையருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. கடந்த பிப்ரவரி 5ல் வெளியான ஊடக அறிக்கையின்படி, கடந்த 2025-ம் ஆண்டில் டெல்லியில் மொத்தம் 24,508 பேர் மாயமானதாகப் புகார் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 60% பேர் பெண்கள் என்றும் குறிப்பிட்டுள்ள மனித உரிமைகள் ஆணையம், காணாமல் போனவர்களில் 15,421 பேரைக் காவல்துறையால் கண்டுபிடிக்க முடிந்ததாகவும் அதே நேரத்தில் 9,087 வழக்குகள் இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளதாகவும் கூறியுள்ளது. - பிப்ரவரி 10, தினகரன்.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# சோர்வு vs சுறுசுறுப்பு



வாழ்க்கையில் சுறுசுறுப்பு என்பது ஒரு ஆற்றல். உடலில் மட்டுமல்ல, மனதிலும் சுறுசுறுப்பாக இருப்பது என்பது நமது எண்ணங்களும், செயலும் உற்சாகமாக இயங்குவதைக் குறிக்கும்.

## சுறுசுறுப்பிற்கு சிறந்த உதாரணம் எறும்பு:

சிறிய உயிர், ஆனால் அதன் உழைப்பு, திட்டமிடல், ஒற்றுமை, மற்றும் தன்னம்பிக்கை மனிதர்களாகிய நம்மையே ஆச்சரியப்படுத்தும். எறும்பு ஒருபோதும் சோர்ந்து போவதில்லை; எத்தனை தடைகள் வந்தாலும் மீண்டும் மீண்டும் முயற்சித்து, தன் இலக்கை அடையும். நாம் வாழ்க்கையில் சுறுசுறுப்பாக இருந்தால்...





- மன உற்சாகம் அதிகரிக்கும்
- சோம்பேறித்தனம் குறையும்
- நம்பிக்கை வலுவாகும்
- வெற்றிக்கு வழி திறக்கும்
- சுற்றியுள்ளவர்களும் ஊக்கமடைவார்கள்
- சுறுசுறுப்பு நம்மை வாழ்வின் ஒவ்வொரு நாளையும் புதிதாய் பார்க்க வைக்கும்.
- “நாளைய தினத்திற்காகக் காத்திருக்காமல், இன்றே செயலில் ஈடுபட வைக்கும்” மனநிலைக்கு கொண்டு சேர்க்கும்.

"சோம்பற்கையால் வேலைசெய்கிறவன் ஏழையாவான்; சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்." நீதி. 10:4

**சோம்பலாக அல்லது சோர்வுடன் வேலை செய்வது வறுமையை ஏற்படுத்தும். சுறுசுறுப்புடன் / விடாமுயற்சியுடன் வேலை செய்பவர்கள் செல்வத்தைச் சேர்ப்பார்கள்.**

Registered under the press and
Registration of Periodicals Act, 2023: TNBIL/2010/32847

பெங்களூரில்...

# வாலிபர் கூடுகை!

2026

**மார்ச் 31**
செவ்வாய்கிழமை

காலை: 9 மணி முதல்
மதியம்: 3 மணிவரை

SCAN ME

முன்பதிவு
செய்கிறவர்கள் மட்டுமே
அனுமதிக்கப்படுவார்கள்.

Registration: ₹ 100/-



செய்தியும், ஜெபமும்:
சகோ. மோகன் சி. லாசரஸ்,
சகோ. வின்சென்ட் செல்வக்குமார்

தொடர்புக்கு: 99620 85523